Code no: 6.

പ്രോഗ്രാം കമ്മിറ്റി

விடியல்.

விடியலே,
நான் உனக்காக காத்திருக்கிறேன்.
நீ என்னை போவுள்ள விவசாயிக்கு-
நண்பன்.
ஆனால், உன்னையும் சிலர்-
எதிரியாக காண்பர்.
ஒன்றிற்கும் உதவாத சில,
மாம்சபிண்டங்கள்.
நீயே சுறுசுறுப்பின் அடையாளம்.
என்றால் உன் தம்பி- இரவு-
எங்களின் உழைப்பிற்கு,
முடிவு தருபவன்.
நீ எங்கள் உழைப்பிற்கு,
உயிர் தருகிறாய்.
நீயும் உன் தம்பியும் என்,
நண்பர்கள் தான்.
என்றால்,
சில மூடர்கள்- உன்னை அவர்களின்,
எதிரியாக மாற்றினர்.
காலத்தின் ரூபங்கள் தானே நீங்கள்.
நீயும், அதுபோல்-உன் தம்பியும் தேவை-
இவ்வுலகில் மனித வாழ்வுக்கு.
உன் வரவினை, பறவைகள்-
தங்களின் மென்மையான
இசையில் தெறிவிக்கின்றனர்.
உழவர்கள்-நாங்கள்-
வயலுக்கு செல்வது,
நீ வரும்போது.
வேலைக்கும் போகாமல், நிற்கும்
மனிதர்களுக்கு தெரியாது-
நீ ஒரு நாள் வேலைக்கு வரவில்லையென்றால்,

அந்த நொடி உலகில்,
அவர்கள் இல்லை என்று.
"நாளை" என்ற ஒரு நாள்,
அவர்களின் மனதில் கூட இல்லை.
அப்படியிருப்பவர்கள் மூடர்கள் தானே.....

என்றால்,
இன்னும் ஒருசில மனிதர்கள்,
உன் தம்பியை- இரவினை-
எதிரியாக காணுகின்றனர்.
அவர்களும்,
ஒரு தரத்தில் மூடர்கள் தானே....
அவர்கள், இருட்டினை வெறுக்கின்றனர்
விடியலே, உனக்கு தெரியுமா....
சிறியதோர் மின்மினிபூச்சி கூட,
தன்னால் முடியும் அளவிற்கு,
இருட்டினை, தன் வெளிச்சம் கொண்டு
நீக்குகின்றது.
ஆனால்,
இவ்வளவு பெரிய மனிதர்கள்,....
ஆறு அறிவு கொண்ட மனிதன்....

நாளையை வெறுப்பவர்களும்,
இன்றினை மறப்பவர்களும்,
மூடர்கள் தான்.....

விடியலே, உன்னை பலரும்,
பல பெயர்களில் அழைக்கின்றனர்.
ஆனால்,
உனக்கு உசிதமான ஒரே பெயர்-
விடியல்.
ஏன் தெரியுமா...?
நீ, மனிதனின்,
ஒரு தினத்தை துவக்குகிறாய்.

ஒரு நாளில்,
உலகின் அழகினை,
நீ முடிவெடுக்கிறாய்.
அது வெயிலாகலாம்,
மழையாகலாம், ஏன் பனி கூட
ஆனால்,
அந்த முடிவு உன்னுடையதுதானே...
ஆதனால், நீ,
ஒரு தினமே எப்படியிருக்க-
வேண்டுமென்று முடிவெடுக்கிறாய்.
நீ அந்த தினத்தை,
நல்லதாக்கலாம், மோசபடுத்தலாம்
நாம் நல்லதிற்கு ஆரம்பம், குறிப்பது,
காலையில் தானே.
நீ அந்த தினத்தை,
நல்லதாக மாற்றினால்,
நீ தானே விடியல்......
அதனால்,
உனக்கு உசிதமான பெயர்-
மாற்றத்தின் அடையாளம்-
விடியல்.